விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 06 ஞாயிற்றுக்கிழமை (18.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 61

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து

# யாழ்.கண்டி வீதியில் கிளைமோர் தாக்குதல்

## சிறுவன் மற்றும் மூன்று இராணுவத்தினர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கண்டி வீதியில் யாழ்.செயலகத்திற்கு அண்மையில் நேற்று முற்பகல் 11.40 மணியளவில் இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் ஒரு சிறுவன் மற்றும் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் 11 இராணுவத்தினரும் 3 பொதுமக்களும் காயமடைந்தனர். இக் கிளைமோர்த் தாக்குதலையடுத்து அப் பகுதியில் நேற்று மாலை வரை பதற்றம் நிலவியது.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சூடு இளைஞன் பலி

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தின் போது ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தில் காயமடைந்த இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (ச-3)

## திருமலையில் நேற்று இளைஞனின் சடலம் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை நிலாவெளிப்பகுதியில் நேற்று இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. உப்புவெளி பகுதியைச் சேர்ந்த இவ் இளைஞன் தனது வீட்டிலிருந்த போது அடையாளம் தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டதாகவும் நேற்றுக் காலை வீதியோரத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-3)

## தலதா மாளிகைக்கு முன்பாகவும் பிக்குகள் முன்னணி சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யக் கோரி தேசிய பிக்கு முன்னணி நேற்று தலதா மாளிகையின் முன்னால் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்துள்ளது.

தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் தமர அமில தேரர் இவ் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்து வைத்துள்ளார். ஏற்கனவே தேசிய பிக்கு முன்னணியினர் கடந்த ஆறு நாட்களாக கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் தமது கோரிக்கையை வலியுறுத்தி சத்தியாக்கிரகத்தை நடத்தி வருகின்றனர்.

எனினும் தமது கோரிக்கைக்கு ஜனாதிபதியோ அல்லது ஏனைய அதிகாரிகளோ உரிய பதில்களை வழங்கவில்லை என தேசிய பிக்கு முன்னணி (06 ஆம் பக்கம் பார்க்க)

## இணைத் தலைமைநாடுகள் இவ் வாரம் கூடுகின்றன!

(கொழும்பு)

இலங்கையில் சமாதானம் மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து இணைத் தலைமை நாடுகள் இவ்வாரம் கலந்தா லோசனை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பு வீடியோ கலந்துரையாடல் தொழில் நுட்பத்தின் ஊடாக நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் யப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசி, நோர்வேயினைச் சேர்ந்த எரிக்சொல் ஹெய்ம், ஜோன் ஹன்சன் பௌயர், அமெரிக்காவைச் சேர்ந்த றிச்சட் பௌச்சர், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் பங்குகொள்ளவுள்ளனர்.

இணைத் (06 ஆம் பக்கம் பார்க்க)

## சீரான பொருள் விநியோகத்திற்கு யாழ்.பத்திரிகைகளே உதவுகின்றன

### அரச அதிபர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு யாழ்ப்பாணப் பத்திரிகைகள் பெரும் பங்காற்றி வருவதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். குறிப்பாக உணவுப் பொருள் விநியோகம் தொடர்பாக உடனுக்குடன் பத்திரிகைகள் ஊடாக அறிவுறுத்தல்களை வழங்கி சீரான விநியோகத்தை மேற்கொள்ள முடிவதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற விசேட கூட்டத்தில் அரச அதிபர் இதனைத் தெரிவித்தார். தற்பொழுது பெரும் சிரமங்களுக்கு (06 ஆம் பக்கம் பார்க்க)

## திஸ்ஸநாயக்காவுக்கு எதிராக ஐ.தே.கவில் முறுகல் நிலை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளராக புதிதாக நியமிக்கப்பட்ட எஸ்.பி.திஸ்ஸநாயக்காவின் அண்மைக்கால அறிக்கைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மத்தியில் கடுமையான அதிருப்தி தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற செயற் குழுக்கூட்டத்தில் திஸ்ஸநாயக்க இந்த பொறுப்புக்கு நியமிக்கப்பட்டபோது ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபயவர்த்தனா, ஜெயலத் ஜெயவர்த்தன, லக்ஷ்மன் செனிவிரட்ண போன்றோர் அண்மைக்காலங்களில் கட்சித் தலைவர் ரணில் (06 ஆம் பக்கம் பார்க்க)

## அரசில் இணைந்து கொள்வதற்கு ஆறு எம்.பிக்கள் காத்திருப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மேலும் ஆறு முக்கிய பிரமுகர்கள் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக இரகசியப் பேச்சுக்கள் இடம் பெற்று வருவதாக அமைச்சர் எச்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பொறுப்புக்களை பகிர்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை காரணமாக அவர்கள் அரசில் இணைவது தாமதமாகுவதாக தெரிவித்த அவர் இருவார காலத்திற்குள் அவர்கள் இணைந்து கொள்வார்கள் என்றார்.

அரசில் இணையவுள்ள அறுவரில் முன்னர் அமைச்சுப் பொறுப்புக்களில் இருப்பதாகவும் அவர் கூறினார். நேற்று அநுராதபுரத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ச-3)

## சிறார் படைச்சேர்ப்பை தடுக்காவிட்டால் சர்வதேசத்தின் ஆதரவை இழக்க நேரிடும்

### பிரி.வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறார் படைச்சேர்ப்பை தடுக்காது போனால் அனைத்துலக ஆதரவை இலங்கை அரசு இழக்க நேரிடும் என்று பிரித்தானிய வெளிவிவகாரத்துறை மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான அமைச்சர் கலாநிதி கிம் ஹாவெல் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை பேரனர்த்த நிவாரணத்திற்கென பிரித்தானியாவினால் வழங்கப்பட்ட நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பார்வையிட்ட கிம்ஹாவெல் இலங்கையில் இரு தசாப்தங்களாக இடம்பெற்றுவரும் போர் தொடர்பாக அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

அதிக... (06 ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் ஏற்பட்டுள்ள பொருட் தட்டுப்பாட்டிற்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களே காரணம்!

### யாழ்.அரச அதிபர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பொருட் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே முக்கிய காரணமென யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குற்றஞ்சாட்டியுள்ளார். குறிப்பாக யாழில் தற்போது தேயிலை மற்றும் சவர்க்கார வகைகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது.

ஆனால் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் களஞ்சியங்களில் அவை இருப்பிலுள்ளதாக அரச அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம் பெற்ற பிரதேச செயலர்கள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்களுக்கான கூட்டத்திலேயே யாழ்.அரச அதிபர் அவற்றை சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிவசுவாமி ,உதவித் திட்டப்பணிப்பாளர் (06 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிளைமோர் பொதுமகன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பிரதேசத்தில் நேற்று பகல் 11.30 மணிக்கு கிளைமோர்த் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவத்தையடுத்து இடம் பெற்ற சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தின்போது பொதுமகன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இரு பொதுமக்கள் காயமடைந்தநிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (06 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# தரிசனம்

சரிநிகர்

## ஆசிரியர் பார்வை

நாடு இரண்டாகப் பிளவுபட்டுக் கிடக்கிறது. இந்தப் பிளவு நாளாந்த வாழ்விலும், ஊடகங்கள், அரசியல்வாதிகள், அரச நிறுவனங் கள் மற்றும் அரச நடவடிக்கைகள் அனைத்திலும் தெட்டத்தெளிவாக வெளிப்பட்டு வருகிறது. வடக்கிலும் கிழக்கிலும் நடாத்தப்படும் யுத்தம் பயங்கரவாதிகள் நாட்டைப் பிளவுபடுத்த அனுமதிக்க முடியாது என்ற நோக்குடன் நடாத்தப்படுவதாகக் கூறினாலும் இது நாளுக்கு நாள் மக்களது மனோ நிலையில் பிளவை மேலும் விரிவுபடுத்திக் கொண்டே செல்கிறது.

இந்த நிலையில் நாட்டை எப்படி இணைப்பது, பிளவுபட்டு நிற்கும் தேசிய இனங்களிடையே ஐக்கியமும் புரிந்துணர்வும் கொண்ட ஒரு சமத்துவமான சமாதானம் நிறைந்த வாழ்வு என்ற கனவை எப்படி நிதர்சனமாக்குவது என்பது பற்றிச் சிந்திப்பதே தர்க்க ரீதியானது. பிளவை இனங்காண விரும்பாதவர்கள் வன்முறையால் பிரிவைத் தடுக்க முயலும் கேலிக்கூத்தை என்றென்றைக்குமாக தமது நலன்களுக்காக செய்துகொண்டுதான் இருப்பார்கள். அவர்களால் ஒருபோதும் இந் நாட்டில்மக்களுக்காக எதையும் செய்துவிட முடியாது. அவர்கள் செய்யப் போவதும் இல்லை.

எனவே, இன்றைய நிலையில் சமாதானம் நிலவக்கூடிய ஒரு ஐக்கியத்தை எப்படி உருவாக்குவது என்பது பற்றிச் சிந்திப்பதும் அதற்காகச் செயற்படுவதுமே அவசியமானது. இங்கு நிலவும் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக அல்லாமல் பயங்கரவாதப் பரச்சினையாகப் பார்ப்பவர்களால் இதைப் பற்றிச் சிந்திக்க முடியாது. அரசியல் ரீதியாகச் சிந்திப்பவர்கள் சமஷ்டி முறையிலான அரசியலமைப்பைப் பிரேரிக்கின்றனர். இந்த சமஷ்டி முறைமை வெற்றிகரமாகப் பல நாடுகளில் இனப்பிரச்சினையைக் கையாள உதவி இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆனால் சமஷ்டி என்றாலே பிரிவினைக்கு வழி கோலும் ஒன்று என்று அதைக் கணமூடித்தனமாக எதிர்க்கும் போக்கு ஒன்றினை அரசியல்வாதிகள் பரப்பிவருகின்றனர். இது எந்தவித ஆதாரமும் அற்ற வெறும் அரசியல் லாபத்திற்காகக் கூறப்படும் கோசம் மட்டுமே என்பது இன்னமும் பலருக்குப் புரியவில்லை.

மக்கள் மத்தியில் சமஷ்டி முறை சம்பந்தமாக கருத்தாடல் வளர்வது இந்த நிலைமையை மாற்றி அமைக்க வழிவகுக்கும் என்று நம்புகிறோம். எனவே இந்த இதழில் தமிழ் வாசகர்கள மத்தியிலான கருத்தாடலுக்காக சமஷ்டியை முன்வைக்கிறோம்.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நிலவி வருகின்ற போர்ச்சூழல் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் கருத்துப் பகிர்வு மற்றும் கருத்தாடல் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதுவும் அண்மைக்காலத்தில தொடர்ச்சியாக நடைபெற்று வரும் கைதுகள், கடத்தல்கள், காணாமல் போதல் என்பன தமிழ்ச் சூழலை ஒரு உறை நிலைக்குக் கொண்டு போயிருக்கின்றது. ஏறத்தாழ ஒரு மயான அமைதி.

சமஷ்டி முறைமை பற்றிய இந்தக் கருத்துப் பகிர்வுக்காக புத்திஜீவிகள் பலருடன தொடர்புகொண்டோம் சிலர் அண்மைக் காலத்தில் தொலைபேசி எண்களையே மாற்றிவிட்டார்கள். 'இன்னுஞ் சிலர் இப்ப இருககிற சூழலில் வேண்டாமே' என்றாகள். வேறு சிலரோ படத்தையோ பெயரையோ பாவிக்காமல் எழுத முடியாதா என்றார்கள்.

சமூகத்திற்கும் புத்திஜீவிகளுக்குமான உறவை எமது காலனிய காலக் கல்வி முறை வெட்டிப் போட்டிருக்கிறது என்கிற குற்றச் சாட்டு ஏற்கெனவே நிலவிவருகிறது. எமது உயர்கல்வி நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும் பின் காலனித்துவத்திற்குத் தேவையான மூளை உழைப்பாளர்களையே உருவாககி வருகின்றது என்று குற்றஞ்சாட்டு வோர் கூறுவர். கணிணி மனபொருள் துறையினையும், ஆங்கில மொழி மூலமான கல்விக்கு நமது. சமூகங்கள் திரும்பக்கொண்டிருப்பதனையும் அண்மைய நல்ல உதாரணங்க ளாகவும் அவர்கள் காட்டுவர். இதனையும் மீறி வெளிவருகின்ற ஒரு சில புத்திஜீவிகளை எமது உயர்கல்வி நிறுவனஙகளின் அதிகா ரக்கட்டமைப்பு வெளித்தள்ளி விடுகிறது. போதாக்குறைக்கு மாறுபட்ட அபிப்பிராயங்களையும், கருத்தாடலையும், கருத்து வெளிப்பாட்டுரிமையையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிற போர்ச் சூழல் அவர்களை மொத்தமாகவே மௌனிக்க வைத்துவிட்டது.

இந்தப் பின்காலனியச் சூழலும் போரும் இலங்கையில் வாழும் தேசிய இனங்களிடையே பரஸ்பர புரிந்துணர்வையும், கௌரவத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்தத் தவறிவிட்டன. பதிலாக நம்பிக்கையின்மையும், அச்சமும் பாரபட்சமுமே மேலோங்கியுள்ளன. இது இலங்கையின் சுயாதிபத்தியம், இறைமை, அபிவிருத்தி, வளர்ச்சி என்பவற்றுக்கு உதவப்போவதில்லை.

# இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறை தீர்வா?

### ச.பா.நிர்மானுசன் (சமூக செயற்பாட்டாளர்)

கடந்த பெப் .4ஆம் திகதி ஸ்ரீலங்கா தனது 59ஆவது சுதந்திர தினத்தை வெகு விமர்சையாகக் கொண்டாடியது. ஸ்ரீலங்காவினுடைய சுதந்திரம் என்பது தனித்து ஒரு இனக்



குழுமத் தினால் பெற்றுக கொள்ளப பட்டது அல்ல என்பது மெய்நிலை. ஸ்ரீலங்காவில் வாழ்ந்த ஒவ்வொரு இனக் குழுமமே தமது தேசத்தின் சுதந்திரத்திற்காக தமது பங்களிப்பினை நல்கியுள்ளன. அவ்வாறான பங்களிப்பினை நலகிய ஒவ்வொரு இனக்குழுமமும் சுதந்திர தினத்தினை மனப்பூர்வமாக அனுஷ்டிக்கும நிலை இன்று இல்லை. அதுமட்டுமன்றி ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் தனது ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு உட்பட்ட பிரதேசமென்று சொல்லப்படுகின்ற பகுதிகளிலேயே சுதந்திரதினத்தை முன்னிட்டு தேசியக் கொடியை சவால்களின்றி ஏற்றமுடியாத இக்கட்டு நிலை. மேற்குறிப்பிட்ட எனது கருத்தானது இலங்கைத் தீவில் நிலவுகின்ற இனக்குழும மோதுகையை எடுத்துக் காட்டுவதற்கான மிக அண்மைய உதாரணம்.

தமிழ் மக்களுக்கு பாரபட்சம் காட்டபபட்டது என்பதையும் அவர்களுக்குப் பிரச்சினை உண்டு என்பதையும் ஸ்ரீலங்காவினுடைய பெரும்பாலான ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். தமிழர் தரப்பும் தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள், காட்டப்பட்ட பாரபட்சங்கள் மற்றும் தமிழ் மக்களுக்குள்ள பிரச்சினைகள் ஆகியவற்றிற்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறார்கள். இங்கு பொதுவானதும நேர்முனையானதுமான விடயம் யாதெனில் இரு பிரதான தரப்புக்களுமே தமிழ மக்களுக்கு பிரசசினை உளளதென்பதில் 'ஒருவித' உடன்பாட்டு நிலையில் உள்ளனர். ஆனால், இரு பிரதான தரப்பும் பிரச்சினையைச் சொல்கின்ற விதமும், அதற்காக முன்வைக்கின்ற தீர்வும் அதனை நின்று சொல்கின்ற தளமும் வேறுபடுகின்றது.

அது மட்டுமன்றி இன்னுமொரு மிகப் பயன் வாய்ந்ததும் பொதுவானதுமான நேர்முனை வாய்ப்புள்ளது. அதாவது பிளவுபடாத இலங்கைக்குள் அதிஉச்ச அதிகாரப் பரவலாக்கம் என்ற அரசாங்கத்தின் கருத்துக்கும் இடைக் காலத் தனனாட்சி அதிகாரசபை வரைவை முன் வைத்து அதற்குத் தகுந்த பதிற்குறியை கொழும்பு காட்டாததால் தற்போது தனியரசு எனற நிலைப்பாட்டிலுள்ள விடுதலைப் புலிகளின் கருத்துக்கும் இடையில ஒரு பொதுவான தீர்வு வழிஉள்ளது. அது இன்று இலங்கைத்தீவு சந்தித்துள்ள பல்வேறு நெருக்கடிகட்கும் தீர்வு காண்பதற்கான நுழைவாயிலாகவும் அமையும். அந்தத் தீர்வு சமஷ்டித் தீர்வே என்று உறுதியாகக் கூறலாம். ஆனால் அந்தப் பயணமும் சவால் மிக்கதொன்றே. இலங்கைத்தீவில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றிணைவதனூடாக அத்தகைய சவாலை முறியடிதது நிலை பேறான நியாயமான கௌரவமான சமாதானத்திற்கு வழிசமைக்கலாம்.

### கீதா (ஒருங்கிணைப்பாளர், விழுது)

சமஷ்டி அடிப்படையிலான தீர்வு இப்போதிருக்கும் காலகட்டத்தில் இலங்கைக்கு ஒவ்வாது. தமிழர்களைப் பொறுத்தவரையில் இரு தசாப்த காலத்திற்கு முந்தியேனும் தீர்வு வழங் கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் மற்றும் இழப்புக்கள, உயிர் சேதங்கள் மிகவும் பாரதூரமானவை. எவ்வாறெனினும் அரை நூற்றாண்டுக்கும் மேலாக அவர்கள் பல்வேறுபட்ட மனோ நிலைகளில் பாரிய நெருக்கடிகளையும், பாரதூரமான சோதனைகளையும் கடந்து வந்திருக்கின்றனர். இந் நிலையில் கிடைக்கவிருக்கும் தீர்வானது எந்தளவுக்கு ஈடாகப்போகிறது? காலம்பிந்திக் கிடைக்கும் சொற்ப அளவினதானதாக அது ஒருபோதும இருந்து விடக்கூடாது. (too little, too late)

முற்பட்டகாலங்களைவிட்டுவிட்டு மிக அணமைக் காலமாகிய ஐந்து ஆண்டுகளை எடுத்துப் பார்த்தால் கூட தமிழர்களது உயிர், பொருள் சேதங்கள் மற்றும் இழப்புக்கள், இடப பெயர்வுகள் என்பவை சொல்லுந்தரமன்று. சரி, சமஷ டி வழங்கப்படுவதாக இருந்தால் எப்போது வழங்குவார்கள்? எந்தளவுக்கு வழங்கப்போகிறார்கள்? இது எவ்வாறு உறுதிப்படுத்தப்படப்போகிறது? தமிழ் மக்களுக்கு அளிக்கப்படும் அதிகாரங்களை தலையீடற்ற நிலையில் எந் தளவுக்குப் பிரயோகிக்கலாம்.? தமிழ் மக்கள் சுயாதீனமாக அவற்றை அனுபவிக்க முடியுமா?

நிசசயமாக இந்தியாவைப் போன்ற அடிப்படையிலான மிகப் பலவீனமான சமஷ்டி முறை எமது அபிலாசைகளுக்கு உகந்தது அல்ல. கன்ரோன் முறை அடிப்படையிலான சுவிற்சலாந்து முறையை ஒட்டிய மாதிரியே (Model) எமக்குப் பொருத்தமானதாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

### பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை

உலகத்தை எடுத்துப் பார்த்தோமானால பலவித அரசுகள் இருக்கின்றன. ஆனால் இந்த நிலைமையை சற்று ஆராய்ந்தால் கனடா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிலெல்லாம் சமஷடி முறையிலான ஆட்சி தான் நிலவுகின்றது.

தனியாக ஒரு தலைவர் நடாத்திய ஆட்சியை எடுத்துக் கொண்டால் அதற்கு உதாரணமாக ஜேர்மனி மற்றது இத்தாலி ஆகிய நாடுகளைக் கொள்ளலாம். ஆனால் இவ்விரு நாடுகளிலும கடைசியாக நடந்தது என்ன? ஒரு தலைவர், தான் விரும்பியபடி ஆட்சி நடாத்தி இறுதியில் அவை அழிந்துபோயின. அதைப் போலவே ரஸ்யாவிலும் கார்ல்மாக்ஸ்எழுதியபடி ஆட்சி நடக்கவில்லை.ஆட்சி முறையும் அமைக்கப்படவில்லை.

இப்பொழுது எங்களுடைய அயல் நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால் கலாநிதி அம்பேத்கார் தலைமையில் ஆலோசித்து எடுத்துக்கொண்ட ஆட்சி முறை, பெருமளவுக்கு சமஷடி முறையினைப் பின்பற்றி அமைக்கப்பட்ட ஒன்றாகும். இதற்குக் காரணம் என்னவெனில் இந்தியாவில் பல இனங்கள் இருந் தன. மொழி, கலாசாரம் மற்றும் வாழ்க்கை நடைமுறைகளை எடுத்துக்கொண்டு பார்த்தோமானால் மொழியாக இருந்தாலோ அல்லது அனு சரிக்கப்படும் வாழ்க்கை முறைகளாக இருந்தாலோ வேறுபாடுகள் இருநதன. ஆதலால் மத்திய அரசாங்கத்தை நிறுவி, அதன்பின் வேறுபட்ட பகுதிகளுக்குப் பொருத்தமான அரசுகளை அமைத்தனர். உதாரணம் கூற வேண்டுமானால் கேரளா, சென்னை, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவற்றைக குறிப்பிடலாம். அவ்வப் பகுதிகளிலுள்ள அரசுகளுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. அதேவேளை வெளிநாட்டுத் தொடர்புகள், இராணுவம், நீதி செலுத்துதல் போன்ற அதிகாரங்களை மத்திய அரசாங்கம் கொண்டிருந்தது. இதனால் இன்றுவரை நாட்டைப் பிளவுபடுத்தக் கூடிய பிரச்சினைகள் தோன்றவில்லை. ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால், பிராந்தியத்தின் தலைவர் மத்திய அரசாங்கத்துடன் ஆலோசித்து அப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம்.

இந்த நிலையில் இன்று இலங்கை பற்றிச் சிந்தித்தால் சுதந்திரம் கிடைத்த காலத்திலேயே சமஷடியினைக் கைக்கொண்டு நெருக்கடி களை விலக்கியிருக்கலாம் என்று எண்ணத தோன்றுகிறது.

### கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து (மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்)

சமஷ்டி என்னும் எண்ணக்கருவின் மையத்தில் இருப்பது அதிகாரப்பகிர்வு தொடர்பான மையக்கருத்தும், சுயாட்சி, பகிர்ந்த ஆட்சி என்பவற்றில் மீளிணக்கத்தில் அதனை வெளிப்படுத்துவதுமாகும்.

மத்தியில் அதிகாரம் செறிந்து கிடக்கும் ஒற்றையாட்சி முறைகளுக்கும் சமஷ்டிக்குமிடையிலான வேறுபாடுகள் கவனிக்கப்பட வேண்டியவை. இதன் படி சமஷ்டிக் கட்டமைப்பில் உள்ள சுய அதிகாரம் பரஸ் பரம் தங்கியிருத்தல், ஐக்கியம்



என்பவற்றின் தொகுப் பானது சமஷ்டிக்கும் அதனை இலங்கையில் அடைவதற்கும் ஒஸ்லோ பிரகடனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிரதான இடையாடலாக அமைகின்றது.

சமஷ்டியின் அவசியமான பண்புகள் மறறும் ஆட்சிமுறை என்ற வகையில் அதன் தொழிற்பாடு தொடர்பாக அக்கறையுள்ளவர்கள மற்றும் பொதுமக்கள் மட்டத்தில் தகவல அறிவு என்பன இல்லாதிருக்கும் அளவிற்கு இந்த விடயங்களில் ஏதோ ஒன்று அல்லது இரண்டும் தொடர்பாக பிரதான பாத்திரங்களான இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் பொதுவான புரிந்துணர்வைக் கொண்டுள்ளார்களா என்னும் பிரதான கவலையும் இங்கு காணப்படுகிறது.

இணைப்பாட்சி எனப் பொதுவாக அங்கீகரிக்கப்படுகின்ற ஆட்சிமுறையினை பரந்தளவில் உள்ளடக்கும் விதத்தில் பொதுப் பெயராக சமஷ்டி கருதப்படவேண்டுமா என்பது அக்கறைக்குரிய மற்றுமொரு விடயமாகும. பொலிஸ், நிதி ,நீதி, நிர்வாகம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் சமஷ்டி அலகுகளில் காணப்படும் அரசாங்கங்களுக்கும் மையத்திற்கும் இடைப்பட்ட பங்குகள் - உறவுகள் தொடர்பானவையாக ஏனைய கவலைகள் அமைந்துள்ளன.

அமைப்புக்களினதும் சமூகங்களினதும் அரசியல் தேவைகளையும் அரசியல் அபிலாசைகளையும் கருத்தில் கொணடு அவற்றை சமநிலைப்படுத்தி முரண் பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்பினரால் சமாதானப் பேச்சின்போது தீர்க்கப்பட வேண்டிய பிரச் சினைகளாகவே இவை உள்ளன.

ஆயினும் அர்த்தமுள்ள சமஷ்டி முறையில உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட சில அடிப்படை அம்சங்கள், கோட்பாடுகள், விழுமியங்களை நிறுவன மற்றும் நடைமுறை ரீதியாக வெளிப்படுத்துவதை அங்கீகாித்து ஏற்றுக்கொள்வதிலிருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. சுயாட்சி , பகிர்ந்த ஆட்சி, சுய அதிகாரம், பரஸ்பரம் தங்கியருத்தல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு இவை அவசியமானதாக இருப்பதுடன் பின்வரும் விடயங்களையும் உள்ளடக்குகின்றன.

- யாப்பின் முதன்மை மையத்தினதும் சமஷ்டி அலகுகளினதும் அதிகாரங்களைத் தெளவாக வரையறை செய்கின்ற ஒரு எழுதப்பட்ட யாப்பு.
- மையத்துக்கும் சமஷ்டி அலகுகளுக் கும் இடையில் அதிகாரப் பகிர்வு தொடர்பான பிணக்குகளின் பக்கச்சார்பற்ற நடுவராகச் செயற்படும் மிகவும உயர்ந்த நீதிமன்றம் என்ற வகையில அமைந்த உச்ச நீதிமன்றம்.
- சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு அமைவாக அமைந்த சகல பிரசைகளுக்குமான உரிமைகள் சட்டமூலம்.
- மையத்தின் சட்டவாக்கத்தில் சமஷ்டி அலகுகள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற இரண்டாவது சபை.
- சமஷ்டி அலகுகளுக்குப் போதுமான அளவு நிதிவளங்கள்.

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் தரப்பினர் நியமங்களின் அடிப்படையிலானதும், நிறுவன ரீதியானதும் நடைமுறைகள் தொடர்பானதுமான சமஷ்டி வரையறைக்குட்பட்ட அரசியல் தீர்வொன்றுக்கு உட்பட்டுப போக முடியுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். நிச்சயமாக இது இலகுவானதாக இருக்கமாட்டாது. மேலும் அதிகாரங்கள் தொடர்பான ஒரு கலந்துரையாடலுக்கு அப்பால் அல்லது அநேகமாகக் கலந்துரையாடலுகது முன்ன் பிரதேசம் தொடர்பான விவகாரஙகள் அதிகாரப் பகிர்வில் காணப்படும் சமச்சீரற்ற தன்மை தொடர்பான கோட்பாடுகள் ஆகியவை தொடர்பாக இணக்கம் காணப்பட வேண்டியுள்ளது.

மேலும் எதிர்காலத்தில் எட்டப்படவேண்டியதும் இறுதியில் ஒரு புதிய சமூக ஒப்பந்தம் அரசு என்பவற்றை கொண்டதுமான ஒரு அரசியலமைப்புத் தீர்வாக இது இருக்கின்றமையால் இனப்பிரச்சினையின் சூழமைவு என்பதைக் கருத்தில் கொள்ளாது ஆட்சி முறையை மேலும் முன்னேற்றுவதற்கான கட்டமைப்பு என்ற வகையில் சமஷ்டி முறைக குச் சார்பான விவாதங்கள் இனிமேல்த்தான் முன் வைக்கப்பட்டு கவனிக்கப்பட வேண்டியவைகளாக உள்ளன.

மேலும் பரந்த வீச்சில் இருக்கக்கூடிய பங்காளர்களுக்கு பங்குபற்றுதலையும் உள்ளடக்கும கட்டத்துக்கு யாப்பு ஆக்கச் செயன்முறை நகரும் போது இது நிச்சயமாக நடைபெறும்.

இஙகு மீண்டும் மீண்டும் மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயமென்னவென்றால் சமஷ்டி என்பது எமது தற்போதைய துன்பஙகள் அனைத்துக்குமான ஒரு சர்வரோக நிவாரணி அல்ல என்பதாகும். எமது தேவைக் கேற்றதாக அமைக்கப்பட்டு அமுலாக்கலுக்கு விடப்பட்டதும் வெளிப்படும் குறைபாடுகள சீர் செய்யப்படும் .

உண்மையில் ஜனநாயக ரீதியான சமாதானத்திற்கும் ஆட்சி முறைக்குமான சமஷ்டி திட்டம் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருக்கும் தன்மையை எப்போதும் கொண்டிருக்கும்.

எனினும் ஐந்தரை தசாப்தங்கள் நீடித்த இன முரண்பாடு, ஒற்றையாட்சி முறையின் கீழ் மோசமடைந்துவரும் 'ஆட்சிமுறை' என்பவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது எமது அரசியல் மற்றும் யாப்பு தொடர்பான படிமுறை விருத்தியில் அவசியமான ஒரு பாரிய மாற்றத்தின் தெளிவான இலக்காக சமஷ்டி தன்னைப் பலமாக விதந்துரைக்கின்றது. நாங்கள் அதனைப் பற்றி அறிவு பெற்று எமது தேவைகளுக்கு ஏற்ப அதனை உருவமைத்து செயறபட வைக்க வேண்டியுள்ளது. இது சுவாரசியமானதாகவும் விரக்தியை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். ஆகவே நாம் அனைவரும பங்காளர்கள் என்ற வகையில் ஈடுபட்டு எமது உரிமைகளையும் கடமைகளையும காத்திரமான வகையில் எடுத்துக்கொள்ள வேண்டும்.



# தரிசனம் 02

ராவய



## ஆசிரியர் பார்வை

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பொது இணக்கப்பாட்டினை எவ்வாறு ஈட்டிக் கொள்வது என்பதே இலங்கை எதிர்நோக்கும் பெரும் பிரச்சினையாக உள்ளது.

அந்த உரிமையை வழங்க மறுப்பதன் மூலம் தமிழர்களுக்கு சிங்களவாகளால் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. எனினும் இந்த அநீதியை வென்றெடுக்க உள்ள ஒரே வழிமுறையாகவும் சிறந்த வழியாகவும வன்முறையைக் கொள்ள முடியாது.

தனி நாட்டை தமது கோரிக்கையாக்கிக் கொண்ட போது அந்த தனி நாட்டை வெற்றிகொள்ள வன்முறையை முன்னெடுக்க வேண்டியுள்ளதைப் போன்று தனி நாட்டிறகான எல்லைகளுக்கான உரிமைகளையும் முன்வைக்க வேண்டியுளளது. போரிடும் இரு தரப்பினரும் தமது கடும் போக்குகளைக் கைவிட்டு அனைவரதும் கௌரவத்திற்கு ஏற்ற இடைக்கால தீர்வை ஏற்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

பிரிவினைவாதத்தை தோற்கடிக்க இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் யுத்தம் நாட்டின் கௌரவத்திற்கு ஒருபோதும் பாத்திரமாகாது. அதேபோன்று தனி நாட்டிற்காக போராடும் விடுதலைப் புலிகள் முன்னெடுக்கும் யுத்த நடவடிக்கைகளும் தவிர்க்கப்பட வேண்டும்.

இரு தரப்பும் தமது அடிப்படைவாத நிலைகளினால் ஏற்படுத்திக் கொண்டுள்ள மற்றும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பயங்கரமான விளைவுகள் குறித்து மீள் பரிசீலனைகளை மேற்கொள்ள வேண்டும.

இலங்கை அரசாங்கத்தின் ஈழ விரோத யுத்தத்தினால் சிங்களவர்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் ஏற்படாதது போன்று விடுதலைப் புலிகளின் ஈழப் போரினால் எவ்வித நன்மைகளும் ஏற்படவில்லை.

ஒருவரையொருவர் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் இந்த யுத்தத்திலிருந்து மீண்டு இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அமைதி வழியில் தீர்வைக் காணும் வழிக்குள் பிரவேசிக்க வேண்டும்.

சிங்கள தமிழ் மக்களின் வாழ்விலும நாட்டிலும் சிறந்த மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதன் ஊடாகவே ஆரம்பிக்கும் எனலாம்.

## தெற்கில் “பொருளாதார யுத்தம்”

தெற்கில் இப்பொழுது பிரபலங்களின் அரசியலே முக்கியத்துவம் பெற்றுள்ளது. இது புதிய விடயமல்ல. 1956ஆம் ஆண்டு முதலே இந்த நிகழ்வு ‘சீ சோ’ போல மாறி மாறி நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இனப் பிரச்சினைக்கு தீர்வு காணமுற்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இந்தப் போக்கினை அவதானிக்க முடியும். தமிழர்கள் மீது பொறாமைப்படும், வெறுக்கும் போக்கு சிங்களவர்கள் மத்தியில் உண்டு. புலிகளும் சிங் களவர்



## அது குறித்த உணர்வு உண்டா?

களை மகாவம்சத்து சிங்கள சமூகம் என்றே அழைத்தனர்.

புலிகளின் அரசியல் தொடர்பாக சிங்களவர்கள காட்டி வரும், காட்டிக் கொண்டிருக்கும் செயற்பாடுகளே இந் நிலையை மேலும் உக்கிரமடையச் செய்தது.

புலகளுக்கு அரசியல் என்ற ஒன்றில்லை. அவர்களிடம் மிலிட்டரி தந்திரோபாயங்களே உள்ளன. எனினும் யுத்தத்தின் மூலம் முன்னோக்கிச் செல்ல புலிகளாலும் முடியாது. அரசாங்கத்தினாலும் முடியாது.

குறிப்பிட்ட காலம் முதலே இலங்கைக்கு எதிர்ககட்சியின் பணிகள் சிறந்த வகையில் கிடைக்காததன் காரணமாக நாட்டின் நிகழ்ச்சி நிரல்களை தயாரிக்கும் வாய்ப்பு இனவாதிகளின் கைகளுக்குள் செனறடைந்தது.

2003ஆம் ஆண்டு வடக்கின் நிகழ்ச்சி நிரல்கள் புலிகளினால் தயாரிக்கப்பட்ட வேளை தெற்கில் அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் ஜே.வி.பியினால் தயாரிக்கப்பட்டன. நாட்டின் இரு பிரதான கட்சிகளுக்கும் அதில் பங்கெடுக்க முடியாதிருந்தது. அதறகு அடுத்த மிக முக்கிய கதாபாத்திரத்தை சர்வதேச சமூகம் வகித்தது. அரசாங்கம் பிறர் கூறுவதற்காக சமஷ்டி பற்றி பேசவும் ஆரம்பித்தது.

இனறு வேகமாக ஆவியாகும் நிலையே காணப்படுகின்றது. உக்கிரமான யுத்தத்தின் பின்னர் இன்னும் இரண்டு வருடங்களின் பின்னர் இரு தரப்பினரும் சோர்வடைந்து தோல்வியுறுவது உறுதியே. எனினும் புலிகள் நீண்ட கெரில்லா பாணி யுத்தத்தை முன்னெடுத்திருப்பது தெற்கற்கு எவ்விதத்திலும் ஏற்புடையதாகாது.

எந்த இனத்திற்கும் யுத்தத்தில ஒப்பீட்டளவில் வெற்றி கிட்டும். ஆனால் அந்த ஒப்பீட்டு வெற்றி குறித்த உணர்வு அரசாங்கத்திற்கு இல்லை. புலிகள் அரசாங்கத்தை பொருளாதார யுத்தத்திற்குள் தள்ளிக் கொண்டிருக்கின்றனர். 20 வருட கால யுத்தத்தினால் சோர்வடையாத சிங்களவர்களுக்கு எண்ணெய் குதங்க்ள் மீதான தாக்குதல்கள், கட்டுநாயக்க மீதான தாக்குதல் பெரும் அதிர்ச்சியை தரும் என்பதை புலிகள் அறிவர். அதாவது சிங்களவர்களை பொருளாதார யுத்தத்தினாலேயே தோற்கடிக்க முடியும். புலிகளின் தற்போதைய யுத்த உபாயமும் அதுவே.

புலிகள் தாக்குதலின் மூலம் காலி துறைமுகத்தை தகர்க்கும் நோக்கத்துடன் வரவில்லை. அங்கு நிலைமைகளைக் குழப்பி விடுவதே அவர்களின் நோக்கமாகும்.

இதனால் காலியில் உல்லாசப் பிரயாணத்துறை மோசமடைந்தது. கொழும்பு துறைமுகத்தை தாக்க முற்படுவதன் நோககமும் காப்புறுதி கட்டணங் களை அதிகரித்து ஏற்றுமதி நடவடிக்கைகளை பாழ்படுத்துவதாகும். புலிகளின் உபாயத்தை புரிந்துகொள்ளாத சிங்கள சமூகம் யுத்த நடவடிக்கை களையே வேண்டி நிற்கின்றது.

சட்டத்தரணி
ஷிரால் லக்திலக்க

இதுவே புலிகளின் தேவை. எமது புத்திஜீவிகளும் முக்கியஸ்தர்களும் நாட்டைப் பற்றி சிந்திப்பதாகவும் இல்லை.

## எம்மவரே இறந்தார்

நிறுத்துங்கள்...!
நிறுத்துங்கள்...!
இந்த சண்டையை நிறுத்துங்கள்!

எல்லாள மன்னா!
யானையிலிருந்து இறங்குங்கள்
துட்டகை முனு அரசரே!
எல்லாளருக்கு ஆசனம் வழங்குங்கள்

மரத்திற்கு மரம் சென்று
பால் எடுத்துக் கொண்டுவரும்
அம்மா சரஸ்வதி
அவள் உதட்டில் புன் சிரிப்பு
எல்லாளனின் சிரிப்பைப் போன்றதாம்

தேயிலைச் செடிகளுக்குள்
கைகள் வலிக்க வலிக்க
பனியில் நனைந்து கொண்டு

காவி படிந்த கண்களுடன்
கறுத்த வியர்வைத் துளிகளுடன்
நித்தியகலா எல்லாளனின் சகோதரி

சரஸ்வதி - நித்தியகலா

மாணிக்ககங்கையில் குளித்த நாம்!
சிவனடிபாத மலையை வணங்கிய நாம்!
பாடசாலையில் ஒன்றாக இருந்த நாம்!



தோசைக் கடையில் உணவருந்திய நாம்!

அலுவலகத்தில் சோமாதேவிக்கு
கதிர்காமத்தின் முகவரியைக்
கொடுத்தது சிவலிங்கம்.....

எல்லாளன் துட்டகை முனு சமர்
துட்டகை முனுவுக்கு வெற்றிமேல் வெற்றி
எல்லாளனின் சடலம் யானையின்மீது


.........................................................

கைதட்டல்களை நிறுத்துங்கள்!
கைதட்டல்களை நிறுத்துங்கள்!
கைதட்டல்களை நிறுத்துங்கள்!
கைதட்டல்கள் யாருக்காக?

ஒரு ... கண்ணீர் ... துளியையாவது
அந்த பெயருக்காக சிந்த
எவராவது இப்போது இருக்கின்றனர?

அன்று எம்மவரே இறந்தார்!
எமது வீட்டின்
இரத்த உறவினர்...!

பராக்கிரம கொடிதுவக்கு
“பொடிமல்லியே” கவிதை
நூலிலிருந்து



# தரிசனம்

ராவய

ஒற்றையாட்சி தொடர்பான எமது சிந்தனைகளில் ஏற்பட்ட பிளவு நிலை ஏற்பட்ட சந்தர்ப்பத் திலேயே நாம் இனப்பிரச்சினை யை நாட்டின் முக்கிய விவகார மாக பேச ஆரமபித்தோம். தேசிய

# இலங்கை இனப்பிரச்சினைக்கு

பிரச்சினை தெடர்பாக பேசும் போது ஒற்றையாட்சி என்ற சிறைக்குள் சிறைப் பட்டிராமல் மாற்றாக சமஷ்டி தீர்வு குறிதது சிந்தித்துப் பார்க்க முடியாதா?



டெஸ்மன் மல்லிக் காரச்சி

கள் இங்கு பொருந்தி வரவேண் டும். அதாவது தும்பிக்கைக்கு ஏற்ப பொருளாதாரம், மனித உரி மைகள், கலாசார உரிமைகள், ஜனநாயகப் பண்புகள் குறித்து நாம் புதிய சிந்தனைகளை ஏற் படுததிக் கொள்ளல் அவசியமாகும். இலங்கையில் சமஷ்டி அறி முகப்படுத்தப்படும் நாளிலேயே இலங்கையின் உண்மையான அரசயல் வரலாறு ஆரம்பமாகின் றது.

*எந்தப் பெயரிலாவது அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளுங்கள்*

பாதிக்கப்பட்ட பெண்கள் சங் கத்தின் தலைவி விஷாக்கா தர்மதாச பின்வருமாறு தமது கருத்துக்களைத் தெரிவிக்கின் றார். இனப்பிரச்சினை தீர்வாக முன்வைக்கப்படும் சமஷ்டியோ அல

யில நிலவும் நிபந்தனையான அர சியலமைப்பினை ஏற்றுக்கொள் ளாது கருத்தியல் மற்றும் ஆயுத ரீதியில புலிகள் அரசுக்கு சவால் விடுத்துள்ளமையே இங்கு ஏற்பட் டுள்ள பிரச்சினைகளுக்கும் நெருக்



அனுருத்த பிரதீப்

கடி நிலைகளுக்கும் காரண மாகும். அரச அதிகாரத்தை பலப் படுத்துவதே இதற்கு தீர்வாக

'டைசி' என்ற அரசியல் ஞானி யின கருத்தின்படி சமஷ்டிக்கு இரு காரணிகள் முக்கியமாக தேவை. சிறிய குழுக்கள் ஒன்று பட வெளிபபடுததும் அக்கறை மற்றும் அடையாளத்தைப் பேணிக் கொள் ளும் அவசியம் என்று இவற்றை குறிப்பிடலாம். இந்த இரண்டு காரணிகளும் இல்லாத போது ஒற்றையாட்சியே நிகழுகின்றது. இல்லா விட்டால் இரண்டு ஒற்றை யாட்சிகளாகும். புலிகள் இந்த விட யங்களை ஏற்கின்றனரா என்பது குறித்து தெளிவான விளக்கத்தை சமஷ்டி தீர்வை முன்வைபபதறகு முன்னர் சிந்திக்க வேண்டும்.

*சமஷ்டி முறை நாட்டை ஐக்கியப்படுத்தும்*

மனித உரிமைகள், பன்மைத் துவம் மற்றும் ஜனநாயகம் என்பன சமஷ்டியின் அடிப்படை தத்து வங்க ளாகும் என்கிறார் கொழும்பு பல் கலைககழகத்தின் சட்டபீடத்தின் கலாநிதி ரொகான் எதிரிசிங்க. நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்

முஸ்லிம் சமூகத்தின் செயற் பாட்டாளரான ஏ.எம்.எம். நௌஷாத் கூறுகின்றார்.

தமழ் மக்கள் சமஷ்டி தேவை எனபதற்காக ஆயுதம் ஏந்த வில்லை. 1948லிருந்து பொய் வாக்குறுதி களை வழங்கி, அவர்களின் ஆத ரவுடன் வாக்குகளைப் பெற்று ஆட்சியமைத்தாலும் தென்னி லங்கை நிர்வாகத்தினால் எந்த நன்மையும் இல்லை.

பிரதேசங்கள் அபிவிருத்தி அடையவில்லை. இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பில்லை. இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக கொண்டு நியாயத்தைப் பெறறுக் கொள் ள்வே தமிழ் மக்கள் தாயக சுயாட் சியைக் கோருகின்றனர். 71-89ல் தெற்கில் இளைஞர்கள் போராடியது சமஷ்டி கேட்டல்ல, சமூக நீதியைக் கேட்டே போராடினர். தமிழ்மக் களின் கோரிக்கையும் அதுவே.

*இறுதி முடிவு தமிழ் மக்களின் கைகளில்*

சாவோதய சுவசேவை சங்கத தின் தலைவி நீத்தா ஆரியரத்

# சமஷ்டி முறை தீர்வா?

இவ்விடயம் குறித்து பேரா தெனிய பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானக் கல்விப் பிரி வின் தலைவர் கலாநிதி டெஸ்மன் மல்லிக் காரச்சி கருத்துத் தெரி விக்கையில் "மாட்டிற்கு தும்பிக் கையைப் பொருத்தியவுடன் மாடு ஒருபோதும் யானையாக முடி யாது. அதனால் தும்பிக்கையுடன் யானைக்குரிய இதர அங்கங்க ளைப் பொருத்தினால் மட்டுமே அது யானையாக முடியும்" என்றார்.

*சமஷ்டி புதிய அரசியலுக்கான ஒரு பிரவேசமா?*

இந்தியாவில் பல்லின பன்மொழி மத சமுதாயம் கொண்ட மக்கள் வாழ்வதை முன்னிட்டு அவர்க ளுக்கிடையில் ஐக்கியத்தை ஏற் படுத்தும் முகமாகவே சமஷ்டி முறை உருவாக்கப்பட்டது. இனங் களுக்கிடையில் மொழிகளுக கிடையில் கலாசாரங்களுக்கிடை யில உள்ள பன்மைத் தன்மையை சகித்துக் கொள்ள சமஷ்டி வழி வகுக்கின்றது. இந்தியாவில் இனங் களுக்கிடையில் அரசியல் மோதல் கள் குறைவாகக் காணப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது.

சமஷ்டியின் மூலம் இனங்க ளுக்கு அதிகாரங்கள் கையளிக் கப்படுவது பற்றி நாம் அறிவோம். தத்தமது அடையாளங்களைப் பேணிக் கொள்ள அந்த அதிகாரங் கள் உதவியாக உள்ளன. இந்த முறையானது அரசியல் நிறுவனத் திற்குள் கட்டமைப்பாக்கப்பட்ட பின்னர் அதில் சிக்கற் தன்மை கள் தோன்றுவதில்லை. இந்திய மக்களின் சிந்தனைகளுக்குள் சமஷ்டி முறை ஊறிவிட்டது. சமஷ்டி என்பது பிறர் சார்ந்த அரசியல், ஜன நாயக, கலாசார, சமூக மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர் பாக சிந்திக்க தூண்டும் ஒரு சிறநத அப்பியாசமாகும்.

ஒற்றையாட்சி வரையறைக் குள் பெரும்பானமை இனத்திற்கு தாம் தொடர்பான ஓர் சுயநல சிந்தனை நிலை ஏற்படுகின்றது. பிற இனத்தவரை அடிமைப்படுத தும் இம்மியளவு எண்ணத்துடன் அன்றி திறந்த மனதுடன் சமஷ் டிக்குள் பிரவேசிப்பதுவே எமது நாட்டின் இனப்பிரச்சினைக்கு சிறந்த வாய்ப்பாக அமையும்.

இனப்பிரச்சினையை ஒற்றை யாட்சி என்ற வரையறையே ஏற்படுத் தியது. மாறாக சமஷ்டி அல்ல. தற் போது எமக்கு தெரிந்த தீர்வாக சமஷ்டியே உள்ளது. அது ஓர் அர சியல வடிவமாகும். நாட்டின் பொரு ளாதாரம் மற்றும் இதர அங்கங்

லது வேறு எந்த அதிகாரப் பகிர்வு விடயமோ அது தமிழ் மக்களுக்கு நீதியான முறையில்



விஷாக்கா தர்மதாச

அதிகாரப் பகிர்வு செய்யப்படும் விடயமாக அமைய வேண்டும். அதிகாரம் பகிரப்படாதிருக்கும் நிலையில் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. 25-30 வருட கால வரலாறு அதனை நிரூபித்து விட்டது. அதனால் தமிழ் மக்கள் தமது எதிர் காலத்தை தீர்மானித்துக் கொள்ளும் வகையிலான அதிகாரத்தை வழங்கும் தீர்வே அவசியமாகும்.

அவ்வாறான யோசனைகளையே முன்வைக்க வேண்டும். தமிழ் மக்க ளினால் முன்பு முன்வைக்கப்பட்ட நிர்வாக அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களை அன்று நிறை வேற் றாது இன்று நிறைவேற்றுவது குறித்து தென்னிலங்கை தலை வர்கள் பேச்சுக்களை நடத்துவது பலனற்றதாகும். அது தமிழர்களின் அபிலா ஷைகளை மீறும் செயலா கவே அமையும். சமஷ்டியோ அல் லது வேறு எந்த அதிகாரப் பகிர்வு விடயமோ அவ்வாறு முன்வைக கப்படும் தீர்வு ஒரே நாட்டிற்குள் தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய அதிகாரத்தை தமிழ் மக்க ளுக்கு வழங்க வேண்டும்.

*புலிகளுடன் என்ன சமஷ்டி?*

இலங்கையில் அரசியலமைப்பு பிரச்சினை நிலவாத காரணத்தி னால் ஒற்றையாட்சியோ அல்லது சமஷ்டியோ அதன் மூலம் அரச அதிகாரத்தை சவாலுக்குட்படுத் தும் பிரச்சினைக்கு தீர்வு கிட்டாது என்று ஜயவர்த்தனபுர பல்கலைக கழகத்தின் அரசியற்துறை பிரி வின் விரிவுரையாளர் அனுருத்த பிரதீப் தெரிவிக்கின்றார்.

அரசுக்கும் மக்களுக்கும் இடை அமையும். மாறாக உடன்படிக் கைகளின் மூலம் கட்டியெழுப்பப் படும அரசியலமைப்பு தீர்வினை எட்ட முடியாது. அதாவது சமஷ் டியோ ஒற்றையாட்சியோ இதற்கு தீர்வாக அமையாது. தீர்வு வேறு இடத்தில் உள்ளது.

இன முரண்பாடுகளைத் தீர்த் துக் கொள்ள சமஷ்டி இந்தியா வுக்கு உதவியாக உள்ளமை உண்மையே. எனினும் இந்திய அரசிய லமைப்பின் தந்தையான டாக்டர் அம்பேத்கர் அதனை சூட் சுமமாகவே உள்ளடக்கியுள்ளார்.

சாதாரண சந்தர்ப்பங்களில் சமஷ்டியாகவும் முரண்பாடுகள மோதல்கள் நிகழும் விசேட சந்தர்ப்பங்களின் போது ஒற்றை யாட்சி முறையாகவும் மாறிச் செயற்படும் வகையில் அரசியல் அமைபபு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது சமஷ்டி அடிப்படை தத்துவங் களுக்கு முரணானது.

சமஷ்டியின் அடிப்படை தத்து வம வழங்கும் அதிகாரத்தை மீள பெற முடியாது என்பதாகும். அதற்கு முரணாக அதிகாரம் பகிரப்பட் டுள்ளதால் இந்திய நாட்டை அரை குறை சமஷ்டி நாடு என்றே கூற வேண்டியுள்ளது. ஏன் இந்தியா அவசர சந்தர்ப்பங்களில் அதிகாரக குவிப்பை நாட வேண்டும் என்று சிந்தித்தது என்பது பற்றியே நாம் முக்கியமாக ஆராய வேண்டும். அவ் வாறான சந்தர்ப்பங்களில் அரசு பலமடைந்திருக்க வேண்டும் என்ப தற்காகவே அவ்வாறான அரசிய லமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என் பதில் சந்தேகமில்லை.

இலங்கை அரசாங்கம் அடையா ளம் தொடர்பான சிக்கலை எதிர் நோக்கிக் கொண்டிருக் கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் நாம் சமஷ்டி தீர்வை முன்னெடுப்பதானது இந் திய சமஷ்டிகது முரணாகவே அமை யும். நாம் இந்திய சமஷடியை முன் னுதாரணமாகக் கொள்ளவே கூடாது.

தந்திரோபாயமான ரீதியில் சமஷ் டியை முன்னெடுக்க முடியாதா என்ற கேள்வியும் எழுகின்றது. அதற்கான பதில் ஆம் என்றே கூற வேண்டும். எனினும் சமஷ்டி அடிப்படைவாதிகளினால் அதற் கான உரிய ஆதரவு கிடைக்காது. எமக்கு ஏற்புடைய சமஷ்டி முறையை உருவாக்குவது குறித்து புத்தி ஜீவிகள் சிந்திதது்ப் பார்க்க முடி யும்.

கும் அதேவேளை தமிழ் மக்களின அபிலாஷைகளை நிறைவேற்றும் முறையாக சமஷ்டியை அவர் இனம் காண்கின்றார்.



ரொகான் எதிரிசிங்க

இனங்களுக்கிடையிலான பிரச் சினையை யுத்தத்தினால் தீர்க்க முடியாது. யுத்தம் என்ற பக்கமும் இங்கிருக்கலாம். எனினும் இது அரசியல் பிரச்சினை என்பதால் இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு அரசியல் தீர்வாகவே அமைய வேண் டும். அத்தீர்வு சமஷ்டியாக இருப் பதே சிறந்ததாகும். இதனால் தமிழர் கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கம் செய் யப்படும். அவர்களுக்கு உள்ளக சுயாட்சி உரிமை கிடைக்கும. இந்த யோசனை புலிகளுக்கு சார்பான தாக இருக்கமுடியும். எனினும் இதன்மூலம் இனங்களுக்கிடையி லான ஐக்கியத்திற்கு வழியேற்படும்.

*தமிழ் மக்கள் நியாயத்தையே கேட்கின்றார்கள்*



ஏ.எம்.எம்.நௌஷாத்

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை மத்திய அரசாங் கத்தினால் தீர்க்க முடியாததினால் தான் தமது தாயகத்தை தாமே ஆளும் அதிகாரத்தை தமிழ் மக்கள் கோருகின்றனர் என்று

னவின கருத்தின்படி தீவிரவாதச செயல்களை தடுக்கும் அதே வேளை தமிழ் மக்களின் நியாய மான பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கு உதவி செய்ய வேண்டும். சமஷடி தீர்வு பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையுமா என்பதை தமிழ் மக்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறுகின்றார்.

கொழும்பில் வாழும் மக்க ளின் அடையாளததை உறுதிப படுத்த வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை சிங்கள மொழியில்



நீத்தா ஆரியரத்ன

வழங்குகின்றார்கள். இதுவே பெரும் அநீதி அல்லவா? சிங் கள மொழியிலேயே விசாரணை களும் நடைபெறுகின்றன. அறி விப்புகள் கூட சிங்கள மொழி யில் வழங்கப்படுகின்றது. சிங் களவர்களான எமக்கு தமிழில் கடிதங்கள் கிடைத்தால் எப்படியி ருக்கும். இது பற்றி நாம் சிந்திப் பதும் இல்லை.

இவை சிறிய நிர்வாகப் பிரச் சினைகள். இந்த சறிய பிரச்சி னைகள் பெரும் பிரச்சினையான இனப்பிரச்சினையைத் தோற்று வித்தது. இப்பிரச்சினையை சமஷ்டியோ அல்லது வேறு எந்த வழிவகையிலோ தீர்க்க வேண்டும்.

இலங்கை மக்கள் தமிழ் சிங் கள மொழிகள் இரண்டையும் கற்றி ருப்பது அவசியம் என்று நீத்தா ஆரியரத்ன சுட்டிக்காட்டுகின்றார்.

*கலந்துரையாடியவர்*
**விமலநாத் வீரரத்ன**

எதிர்வரும் சந்ததியினருக்கு இரு மொழிகளையும் பயிற் றுவிக்க நாம் இப்பொழுதே நட வடிக்கைகளை எடுப்போமாயின் எதிர்கால சந்ததியினருக்கு இப் பிரச்சினையை விளங்கிக் கொள்ள முடியுமாகவிருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஊழியத்திலும் அனுதாபமே அதிக உதவி அளிப்பதாகும்.
—ஆவ்வை

வலம்புரி

# கடத்தப்பட்ட செய்தியாளரை மனிதாபிமானத்தின் பேரால் விடுவிக்க வேண்டும்

வலம்புரி மற்றும் யாழ்.தினக்குரல் ஆகியவற்றின் பிரதேச செய்தியாளர் சுப்பிரமணியம் இராமச்சந்திரன் கடந்த வியாழன் இரவு காணாமல்போயுள்ளார்.

இச் செய்தி குடாநாட்டுப் பத்திரிகைகளிடையே பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அதற்கு மேலாக அவர் கடத்தப்பட்டமை காரணமாக அவரின் குடும்பம் தாங்கொணாத் துன்பத்தை அனுபவிக்கின்றது.

எனவே செய்தியாளர் இராமச்சந்திரனைக் கடத்தியவர்கள் மனிதாபிமானத்தின் பேரால் அவரை விடுவிக்க வேண்டும். யாழ்.குடாநாடு இறுக்கமான சூழ்நிலைக்குள் அகப்பட்டுள்ளது.

இக் காலகட்டத்தில் பத்திரிகைப் பணி என்பது மிகவும் ஆபத்தும் பயங்கரமும் நிறைந்ததாக இருப்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

எனினும் தகவல்களை வெளிக்கொணர வேண்டும், பொதுமக்களுக்கு தகவலை வழங்க வேண்டும். இதுவே ஒரு செய்தியாளனின் கடமை என்ற வகையில் பணி தொடர்கின்றது.

வெளிக்கொணரப்படும் செய்திகள் நீதியானவையாக - உண்மைத் தன்மையுடையவையாக இருக்க வேண்டும் என்ற ஊடகத் தர்மம் பாதுகாக்கப்பட வேண்டிய அதேநேரம், பத்திரிகையாளர்களுக்கான பாதுகாப்பு வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதும் இங்கு சுட்டிக்காட்டுதற்குரியதாகும்.

குறிப்பாக யாழ்.குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் பாதிக்கப்படுகின்றபோது அதற்குக் குரல் கொடுக்க யாருமே இல்லை என்ற பரிதாபம் வேதனைக்குரியது.

பத்திரிகை முகாமைகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முற்படுகின்றன. சிலவேளைகளில் குறித்த செய்தியாளர் தமது பத்திரிகைக்கான செய்தியாளர் என்பதைக் கூட உரிமைப்படுத்துவதில் பத்திரிகை நிறுவனங்கள் தயங்குகின்றன.

இத்தகைய சந்தர்ப்பங்களில் 'சுயாதீன' என்ற சொற்பதத்தை பயன்படுத்தி அவை தப்பித்துக் கொள்வதைப் பார்க்கும்போது 'பாவம் செய்தியாளர்கள்' என்ற இரக்க எண்ணமே மனதில் உதிக்கின்றது.

அவ்வகையில் செய்தியாளர் இராமச்சந்திரன் யாழ்.குடாநாட்டில் இரண்டு பத்திரிகைகளில் செய்தியாளராகப் பணியாற்றியவர். அதற்கு மேலாக யாழ்.தினக்குரல் பத்திரிகையின் வடமராட்சி விநியோகஸ்தராகச் செயற்பட்டார்.


2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத நடுப்பகுதிக்குப் பின்னர் - இக்கட்டான சூழ்நிலையில் வடமராட்சி மக்களுக்கு யாழ்.தினக்குரல் பத்திரிகை கிடைக்க, அந்தப் பத்திரிகையின் விநியோகஸ்தராகவும் அவர் பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விதம் யுத்த சூழ்நிலையில் செய்தியாளராக, பத்திரிகை விநியோகஸ்தராகவிருந்த இராமச்சந்திரனை கடத்தியவர்கள் அவரை மனிதாபிமானத்தின் பேரால் விடுவித்து உதவ வேண்டும். இது ஊடகவியலாளர்களின் உருக்கமான வேண்டுகோள்.

அதேசமயம் தனியார் கல்வி நிறுவனத்தின் உரிமையாளராகவிருந்து மாணவர்களின் கல்விக்கு பணியாற்றியவர் என்ற வகையிலும்அவரை விடுவித்து உதவ வேண்டும் என்பது அவரிடம் கல்வி கற்ற மாணவர்களின் தாழ்மையான வேண்டுகோளாகும்.

# ஜே.வி.பி. ஒருமணி நேரம் தூங்கினால் நாட்டை அமெரிக்கா சூறையாடிவிடும்!

## சோமவன்ச அமரசிங்க உரை



(கொழும்பு)

ஜே.வி.பி. ஒருமணி நேரம் தூங்கினால் நாட்டின் அரைப் பங்கை அமெரிக்கா சூறையாடி விடும் என அக்கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பின் புறநகர்ப் பகுதியான நுகேகொடவில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டப் பேரணியில், இலங்கை உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கா மூக்கை நுழைப்பதாக வன்மையான கண்டனம் முன்வைக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க தனது உரையில் தெரிவித்துள்ளதாவது,

தற்போதைய சூழ்நிலையில் ஜே.வி.பி.விழித்திருந்து அவதானத்துடன் நாட்டைப் பாதுகாத்து வருகின்றது. தற்செயலாக ஜே.வி.பியினர் ஒரு மணிநேரம் கண்மூடித்தூங்கினால் நாட்டின் அரைவாசிப் பகுதியை அமெரிக்கா களவாடிச் சென்றுவிடும் அபாயம் காணப்படுகின்றது.

நாட்டின் இயற்கை வளங்களை அமெரிக்கா போன்ற மேற்குல நாடுகளுக்கு விற்கின்ற இன விரோதிகளே தற்போது சுதந்திரக் கட்சியுடன் போய் இணைந்திருக்கின்றனர். நாட்டின் விசுவாசமான, பொறுப்புள்ள, நேர்மையான ஒரு எதிர்க்கட்சியாக ஜே.வி.பி. தற்போது வளர்ச்சி பெற்று வருகின்றது.

மக்கள் ஆதரவுடன் நாட்டை ஆளும் பொறுப்பை ஜே.வி.பி. எடுத்துக் கொள்ளும் காலம் வந்து கொண்டிருக்கின்றது. இருந்தாலும் ஜே.வி.பி. அவசரப்படப் போவதில்லை. சரியான நேரத்தில் எமது இலக்கை அடைவோம் என்றார்அவர்.

இந் நிகழ்வில் உரையாற்றிய ஜே.வி.பிக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறியதாவது,

ஆளும் சுதந்திரக் கட்சியிலிருந்து மங்கள சமரவீர, சிறிபதிசூரியாராட்சி போன்றவர்களை நீக்கியதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசாங்கச் சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்கு பற்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவலைப்படுவது உண்மையாகவிருந்தால்,முதலில் அமைச்சர் திஸ்ஸ விதாரணவையே பதவி நீக்கம் செய்திருக்க வேண்டும்.

அதிகாரப் பகிர்வு என்று சத்தமிட்டுக் கொண்டு திரியும் திஸ்ஸ விதாரணவின் கருத்து மகிந்த சிந்தனைத் திட்டத்திற்கு முற்றிலும் முரண்பட்டு இருக்கின்றது. ஒற்றையாட்சியின் கீழ்த்தான் தீர்வு என்ற மகிந்த சிந்தனை மகிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டது என்றார். (ச-5)

# ஈழத் தமிழர்களுக்கு உதவுவதற்கே தி.மு.க.செயற்பட்டு வருகின்றது!

## தி.மு.க. பிரமுகர் இளங்கோவன் செவ்வி

(லண்டன்)

ஈழத்தில் உணவு, மருத்துவ உதவிகள், கல்வி வசதி வாய்ப்புக்கள் கிடைக்காமல் தவிக்கும் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே நாம் செயற்பட்டு வருகின்றோம்.

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கோ ஆயுதக் கடத்தல்களுக்கு அனுமதி வழங்குவதற்கோ தி.மு.க. முயற்சிக்கவில்லை என்பதுடன் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை எங்களது தலைவர் வன்மையாகக் கண்டித்திருக்கின்றார்.

ஆனால் ஈழத்துத் தமிழர்கள் படுகின்ற துன்பங்களையிட்டு நாம் கவலையடைகின்றோம் என்று தி.மு.கவின் பிரமுகர் டி.கே.எஸ்.இளங்கோவன் தெரிவித்தார். பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அந்தச் செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது,

இந்தியாவிலிருந்து கடல் வழியாக இலங்கைக்கு ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றது என்றால் அவை விடுதலைப்புலிகளுக்காகத்தான் என்று சொல்ல முடியும். ஏனென்றால் அங்கு ஆயுதப் போராட்டத்தை விடுதலைப்புலிகளே நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆயுதங்கள் கடத்தப்படுகின்ற போதுஅவற்றைப் பொலிஸார் மடக்கிப் பிடிக்கின்றனர் என்பதால் இந்த அமைதியிலும் தமிழ் நாட்டுப் பாதுகாப்புப் படையினர் உசாராகவிருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

தமிழ்நாட்டு அரசாங்கம் ஆயுதக் கடத்தலைத் தடுப்பதற்கான சகல விதமான தீவிர நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது என்பதனால் இவ்வளவு பெரிய தொகை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சிங்கள அரசாங்கத்தில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஆயுதக் கடத்தல் நடைபெறுகின்றதே தவிர தமிழ் நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் அங்கே இரண்டு தரப்பினரும் யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகி யுத்தத்தை முன்னெடுக்கப்போவதாக அறிவித்துவிட்டு இந்த ஆயுதக் கடத்தல்களில் ஈடுபடுவதில்லை. தி.மு.க. அரசாங்கமும் அவர்களைப் போராடுமாறு கேட்கவுமில்லை.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற முடிபை தி.மு.க.இப்போது எடுக்கவில்லை. போரில்லாத காலத்தில், போர் நிறுத்த காலத்தில் முடிபுகளை எடுத்திருக்கின்றது.

ஒரு இனத்தை அழிக்கும் நோக்கில் அரசாங்கம் ஒன்று ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகக் கூறி அதற்கு எதிராகப் போராடிக்கொண்டிருப்பவர்களையும் எங்களையும் இணைத்துப் பார்ப்பது தவறு.

தி.மு.க.எக்காலத்திலும் விடுதலைப்புலிகளுக்கு உதவவில்லை. ஈழத்திலுள்ள தமிழ் மக்களுக்கே குரல் கொடுத்து வந்திருக்கின்றது. போராளிகளுக்கு ஆதரவு அளிப்பது தி.மு.கவின் நோக்கமல்ல.எந்தவொரு அரசாங்கமும் போராளிகளை ஆதரிக்காது. பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்வு காண வேண்டும் என்றே நாம் எல்லா நிலைகளிலும் முடிபெடுத்துள்ளோம். (ச-5)

# யாழ்ப்பாணத்திற்கு தற்பொழுது பொதிகளில் மருந்துப் பொருள்களையே அனுப்ப முடியும்

## பிரதித் தபால்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்காக தற்போது மருந்துப் பொருள்கள் அடங்கிய பொதிகள் மட்டுமே பொறுப்பேற்கப்பட்டு வருவதாகத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அப்பொதிகளின் நிறை ஒரு கிலோக்கிராமுக்கு குறைவாக இருக்க வேண்டுமெனவும் கடந்த திங்கட்கிழமையிலிருந்து இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதாக நடவடிக்கைப் பிரிவின் பிரதித் தபால்மா அதிபர் ஆர்.டி.பி.காமினி கூறியுள்ளார்.

குறிப்பிட்ட அளவைத் தாண்டும் எந்தப் பொதியும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.மாவட்டத்தில் உணவுப் பொருள்கள் போதுமான அளவு கையிருப்பில் இருந்து வருவதனால் அவற்றைப் பொதிகள் மூலம் அனுப்புவதற்கான எந்தத் தேவையும் தற்போது கிடையாது என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கூறியுள்ளார்.

எனினும் கடந்த தினங்களில் பொறுப்பேற்கப்பட்ட பொதிகள் யாவற்றையும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த வார காலப் பகுதிக்குள் அவை அனுப்பி வைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மதுரையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இம் மாத இறுதிப் பகுதிக்குள் ஒரு தொகுதி முத்திரைகளை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பிரதித் தபால்மா அதிபர் ஆர்.டி.பி.காமினி தெரிவித்துள்ளார். (ச-3)

# பேருந்து உதிரிப்பாகங்கள் கப்பலில் ஏற்றப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகளுக்கான உதிரிப்பாகங்கள் இந்துருவலி கப்பலில் ஏற்றப்பட்டு வருவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் கேட்கப்பட்டவுடனேயே அவர்களுக்கான ரயர் மற்றும் உதிரிப்பாகங்கள் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் கப்பல் பெரும்பாலும் புதன்கிழமை யாழ்.நோக்கி வரும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

# ஊடக பயிற்சி மையத்தில் நள்ளிரவு வேளை திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் நேற்று முன்தினமிரவு 11 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

மின்சாரம் தடைப்பட்ட நேரத்தைப் பயன்படுத்தி அங்கு வைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சி ,வானொலி மற்றும் இலத்திரனியல் ஊடகப் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்குத் தேவையான இலத்திரனியல் உபகரணங்கள் என சுமார் 11 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. இப்பொருட்கள் அண்மையிலேயே கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

# சமுர்த்தி, இலவச நிவாரணம் 21 ஆம் திகதி முதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் சமுர்த்தி பெறுபவர்களுக்கான ஜனவரி மாத நிவாரணம் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் வழங்குமாறு சகல பிரதேச செயலர்களுக்கும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவுறுத்தியுள்ளார்.நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற விசேட கூட்டத்திலேயே அவர் அதனை அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நிவாரண வழங்கல் இம் மாத இறுதிக்குள் வழங்கப்பட்டு புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் கணக்குகள் ஒப்படைக்கப்பட வேண்டுமெனவும் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ஆட்டாமா இதுவரையும் வழங்கப்படவில்லை என தெரிவித்த அரச அதிபர் ஆட்டா மா விநியோகத்திற்கு உத்தரவுப் பத்திரம் தேவையில்லை எனவும் தேவையானவர்களுக்கு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களுக்கு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவுறுத்தியுள்ளார்.

ஆட்டா மா நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காகவே எடுத்து வரப்பட்டதாகவும் எனவே அவர்களின் தேவைகளுக்கு விரைவாக வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ச-5)

# இரு சிங்களவர்கள் இரத்தினபுரியில் கைது

விடுதலைப்புலிகளுடன் நேரடித் தொடர்பை வைத்திருந்ததாக தெரிவித்து இரு சிங்களவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு இவர்கள் இரத்தினபுரியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரவிட்ட என்ற சிங்களக் கிராமத்தை சுற்றி வளைத்து கைது செய்யப்பட்ட இந்த இரு நபர்களும் இரகசியமாக பொலிஸாரினால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பின்னர் இவர்களது உறவினர்கள் தங்களது சட்டத்தரணி ஊடாக விசாரித்த போது இருவருக்கும் விடுதலைப்புலிகளுடன் தொடர்பிருப்பதுடன், விடுதலைப்புலிகளிடம் பல்வேறு உதவிகளையும் இவர்கள் பெற்றிருப்பது தமது விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக பொலிஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த இருவரும் கிளிநொச்சி சென்று விடுதலைப்புலிகளிடம் ஆயுத பயிற்சி பெற்றுள்ளதுடன் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்து போராட சிங்கள விடுதலை முன்னணி அமைப்பொன்றை நிறுவ திட்டமிட்டு வந்தமையும் கண்டறியப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# மின் கட்டணம் குறைப்பு

மின்சாரத்தை 90 அலகுகளுக்கு குறைவாக பயன்படுத்தும் பாவனையாளர்களுக்கு இம் மாதம் முதலாம் திகதி முதல் மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த புதிய மாற்றத்திற்கு அமைய 90 அலகுகளுக்கும் குறைவாக மின்சாரத்தைப் பாவிக்கும் பாவனையாளர்கள் மற்றும் பாடசாலைகள், அரச வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்கான மின் கட்டணம் குறைக்கப்படும் எனவும் மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த மாற்றத்திற்கு அமைய சிறு வியாபாரிகளுக்கும் நன்மை ஏற்பட்டுள்ளதாகவும் வற் வரி நீக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச-3)

## வவுனியாவில்...

இச் சம்பவத்தின் போது உயிரிழந்தவர் சின்னராசா சுரேஸ் (வயது 18) எனவும் , குமார் ரகுபரன் (வயது 17) லோகேஸ்வரன் (வயது 36) ஆகிய இருவரும் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ச-3)

## சீரான...

மத்தியில் அர்ப்பணிப்புடன் யாழ்.பத்திரிகைகள் செயற்படுகின்றன.

எனினும் யாழ்.மக்களுக்கான அறிவுறுத்தல்களை உடனுக்குடன் வெளியிடுவதில் பத்திரிகைகள் தவறுவதில்லை. அதேவேளை பொதுமக்களிடையே காணப்படும் கஷ்ட நிலைமைகளை அறிந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளின் பங்களிப்பு பெரும் உதவியாகவுள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## யாழில்...

எம்.பிரதீபன் ,உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ,பிரதேச செயலாளர்கள் மற்றும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ,வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் , பேக்கரி உரிமையாளர் சங்கம் ,விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவர், பொதுமுகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலுக்கு விசேடமாக யாழ்.பத்திரிகைகளை சேர்ந்த செய்தியாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். நேற்று நடைபெற்ற கூட்டத்தில் பிரதேச செயலர்கள் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல அறிவுறுத்தல்களையும் கட்டளைகளையும் அரச அதிபர் பிறப்பித்தார்.

அவற்றில் சில வருமாறு ,

வழங்கல் கட்டளைகளை ஒழுங்காகப் பெற்று பொருட்களை ஏற்றி களஞ்சியத்தில் வைத்திருக்காமல் பிரதேச செயலர்களின் தீர்மானத்திற்கு அமைவாக விரைவாக விநியோகங்களை பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும்.

பொது மக்களிற்கு நன்னோக்குடனும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சீராக பொருட்களை விநியோகிக்க முடியாதுவிடின் பொருள் விநியோகத்தை தனியாருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் பிரதேச செயலர்களும் சமூகத்திற்காக நல்ல சிந்தனையுடன் அர்ப்பணிப்புடன் இதய சுத்தியுடன் செயற்படவேண்டும். பிரதேச செயலர்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் களஞ்சியத்தின் இருப்பு மட்டங்களை நாளாந்தம் ஆராய்ந்து மேலதிகமாகவுள்ள பொருட்களை தனிப்பட்ட தீர்மானத்தில் தனியார் கடைகளுக்கு வழங்க வேண்டும்.

தற்போது குடாநாட்டில் பொருட்களின் தட்டுப்பாட்டிற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே பொறுப்பு. அவர்கள் சீராக வழங்கல் கட்டளைகளைப் பெற்று பொருட்களை விரைவாக ஏற்காமையே முக்கிய காரணமாகும்.

இதனால் விநியோகங்கள் தாமதமடைந்து பொருட்தட்டுப்பாடு ஏற்படுகின்றது. இவற்றைக் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.யாழ்.குடாநாட்டிற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரூடாக கப்பல் மூலம் எடுத்து வரப்படும் பொருட்கள் நாளாந்தம் மூன்று துறைமுகங்களூடாக (காங்கேசன் துறை , மயிலிட்டி ,காரைநகர்) ஆயிரத்து 100 மெற்றிக் தொன் வரையில் இறக்கப்படுகின்றன.

இவ்வாறு இறக்கப்படும் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு போதிய இடவசதி இல்லை. எனவே பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் சீராகவும் விரைவாகவும் விநியோகத்தை மேற்கொள்வதுடன் தமது விநியோகத்திற்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும்.

வழங்கல் கட்டளைகள் வழங்கப்பட்டு மூன்று தினங்களுக்கு அரச களஞ்சியத்தில் இருந்து பொருட்கள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் ஏற்றப்படாவிடின் திட்டப் பணிப்பாளரினால் பொருட்கள் களஞ்சியத்திலிருந்து ஏற்றி அனுப்பப்படும்.

அதற்கான ஏற்றுக் கூலியை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்த வேண்டும். குடாநாட்டுக்குத் தேவையான பொருட்கள் கப்பலில் எடுத்துவரப்படுவதாக மக்கள் உணரும் வகையில் பிரதேச செயலர்களும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் செயற்படவேண்டும் என்றும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கேட்டுக்கொண்டார். (ச-5)

## சிறார் படைச்சேர்ப்பை...

புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடற்கரையிலிருந்து 250 மீற்றர் தூரத்திலேயே வீடுகள் கட்டப்பட வேண்டுமென்ற நிபந்தனையை அரசு தளர்த்தியுள்ளது.

மக்கள் கடற்கரையிலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் வீடுகளை அமைத்து வருகின்றனர். மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதாக நான் நினைக்கின்றேன். அவர்களுக்கு புதிய வீடுகள் வழங்கப்பட்டு வருவதால் அவர்களிடம் புதிய நம்பிக்கைகள் பிறந்துள்ளன.

இலங்கை அரசுக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள முடியும். இராணுவ வெற்றிகளின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அரசு விடுதலைப்புலிகளை ஒரு பிரதேசத்தில் இருந்து வெளியேற்றலாம். ஆனால் ஒரு நாள் அவர்கள் ஒன்று திரண்டு மீண்டும் வருவார்கள். படுகொலைகள் ஆரம்பமாகும்; பயங்கரவாத நடவடிக்கைகளும் மீண்டும் தலை தூக்கும் இரு தரப்புக்களும் இணைந்து பணியாற்ற வேண்டும்.

போர் நிறுத்த உடன்பாட்டை பலப்படுத்துவதன் மூலம் அமைதி முயற்சிகளை கட்டியெழுப்ப வேண்டும். இதுதான் இலங்கைத் தீவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு ஒரே வழியாகும்.

இந்த அரச நல்ல நோக்கத்துடன் உள்ளதாக நான் நினைக்கின்றேன். எனவே எங்களால் முடிந்தவரை அவர்களை ஊக்குவிப்போம். ஆனால் சிறார் கடத்தல் போன்ற நடவடிக்கைகளை அனுமதிக்கமட்டோம். அரசுக்கு அதுதெரியாது என்றாலும்;

அவர்கள் அது நடைபெறாத வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை அவர்கள் உறுதி செய்யவேண்டும். இந்த நடவடிக்கைகள் மூலம் மனித உரிமைகள் இலங்கையில் மதிக்கப்படுவதாக அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். (ச)

## இணைத்...

தலைமை நாடுகளின் பிரதிநிதி கள் தமது நாடுகளில் இருந்த வண்ணம் வீடி யோ தொழில் நுட்பத்தினூடாக இந்த கூட்டத் தில் கலந்து கொள்வர் என இலங்கைக்கான யப்பானியத் தூதுவராலயத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-3)

## தலதா...

குற்றஞ் சுமத்தியுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி போர் நிறுத்த உடன்பாட்டிற்கு ஐந்து வருடங்கள் நிறைவடைகின்றன. இந்த நிலையில் அதற்கு முன்னர் போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து அரசாங்கம் விலகாவிட்டால் அது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இராஜதந்திர தகுதியை பெற்றுக் கொடுத்துவிடுமென பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது. (ச-3)

## திஸ்ஸநாயக்காவுக்கு...

விக்கிரமசிங்கவை குறை கூறி எஸ்.பி.திஸ்ஸநாயக்காவால் தெரிவிக் கப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக தமது அதி ருப்தியை தெரிவித்துள்ளனர்.

கட்சிக்குள் ஒழுக்க விதிகள் கடைப்பிடிக்கப்படவேண்டுமெனவும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். இதனிடையே கட்சியில் சில உறுப்பினர்களின் எதிர்ப்புக்கள் இருந்தாலும் தான் ஏகமனதாக கட்சியின் தேசிய அமைப்பாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக எஸ்.பி.திஸ்ஸநாயக்கா தெரிவித்துள்ளார். (ச-5)

## யாழ்.கண்டி வீதியில்...

கண்டி வீதியில் சென்று கொண்டிருந்த இராணு வாகனத்தை இலக்குவைத்து நேற்று முற்பகல் 11.40 மணியளவில் யாழ். செயலகத்திற்கு அருகாமையில் உள்ள சோமசுந்தரம் அவனியூவுக்கு முன்பாக இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

சோமசுந்தரம் அவனியூ எனப்பெயரிடப்பட்ட வீதிப்பலகைக்கு கீழ் பொருத்தப்பட்டிருந்த கிளைமோரே வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது. இதில் எட்டு வயதுச் சிறுவன் மற்றும் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

மேலும் 11 இராணுவத்தினரும் மூன்று பொதுமக்களும் படுகாயமடைந்தனர். குறிப்பிட்ட இராணுவ வாகனம் சென்று கொண்டிருந்த போது வீதியில் சென்றவர்கள் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் கிளைமோர் வெடித்துள்ளது. அதன்போது சம்பவ இடத்தில் தனது தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் வீதியோரமாக நின்றிருந்த மோகன் கபிலன் (வயது8) என்ற சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

காயமடைந்த இராணுவத்தினரில் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் இருவர் பலாலி வைத்தியசாலையிலும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர் குலநாயகம் மோகன் (வயது 47),அரியாலை கண்டி வீதியைச் சேர்ந்த அப்பாத்துரை சித்திரா (வயது 48),நீர்த்தாங்கியடியைச் சேர்ந்த அம்புறுஸ் ஜெசுதாசன் (வயது 53) ஆகிய மூவரும் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 11 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இந்துக் கல்லூரி ஆசிரியரின் மோட்டார் சைக்கிளும் முற்றாக எரிந்து காணப்பட்டது. குண்டு வெடிப்பு இடம்பெற்றிருந்த இடத் திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

இதேவேளை கிளைமோர்த் தாக்குதலைத் தொடர்ந்து கண்டி வீதியில் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக வீதிக் காவலில் இருந்த இராணுவத்தினர் தொடர்ச்சியாக சில நிமிடங்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். (எ-1)


# மரண அறிவித்தல்

## கந்தையா சதாசிவம்

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பழம் றோட் இல.250 கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சதாசிவம் 17.02.2007 அன்று காலமானார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும், ஜேர்மனியில் வசிப்பவர்களான ஜெயதேவி, டில்லிராணி, ஜீவதாரிணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் , சிவயோகநாயகம், சச்சிதானந்தன், தவச்செல்வன் ஆகியோரின் மாமனாரும், பிரசாத், பிரதாப் , பிரஹாஸ், ஜொயிலி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2007) காலை 10 மணிக்கு நடைபெற்று கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

250, பழம் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்;
இராசமணி
மனைவி

(C-621)

# கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவன்
ஜெ.நிலாசனின் பாசமிகு தந்தையார்
அமரர் பொன்னம்பலம் ஜெயராஜசிங்கம்
அவர்கள் 17.02.2007 அன்று
இறைபதம் அடைந்ததையிட்டு
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

அமரர்
பொன்னம்பலம் ஜெயராஜசிங்கம்

2-ம் வருடம்
விஞ்ஞான பீட மாணவர்கள்

(C-624)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.